T-UN-308

கைத்தறிக்கு விடுதலை...?

மதிப்புரைக்காக.



பது :—

ம்

மகா. பா. ஆ. சிவராமன்.

[கைத்தறி வாரம்] 1954 [விலை அணா 3

அனுபவம் வாய்ந்த
ஆட்களைக் கொண்டு
நவீன முறைப்படி
தயாரிக்கப்பட்டு வரும்

பாரதி சோப்

துணிகளை சுத்த
வும் வெண்மை
சலவை
மிகவும்
ந்தது.

★

ப் ஒர்க்ஸ்
ப்பேட்டை,
சலம

பக்ஷிராஜா தீப்பெட்டிகளை உபயோகியுங்கள்

நேஷனல் இன்டியன் மேச கம்பெனி, நாமக்கல்

Certified by H. E. the Governor of Madras.

Specialists in High class Hand-Loom Sarees and Silks,

KANDA VILAS

SALEM — TIRUNELVELY

கைத்தறியில் தயார் செய்த

நூதன

பட்டு & நூல்

ஜவுளிகளும்

இதர நாகரீக ஆடைகளும்

சல்லீசாக கிடைக்கும்

இடம்

கந்த விலாஸ்

கடைவீதி	கீழ ரத வீதி
சேலம். ★	திருநெல்வேலி
போன் : 123	போன் : 121

போன் : 146 Tel : BULLION P. B. No. 47

ஸ்வர்ண மாளிகை.

உத்திர வாதமுள்ள பவுன் நகைகளுக்கும் வெள்ளி சாமான்களுக்கும்

கும்பகோணம் வெள்ளிப் பாத்திரக் கடை

கடைவீதி, சேலம்.

வாடிக்கையாளர்களின் சவுகரியத்தை முன்னிட்டு நவீன தினுசுகளில் கால்செயின், கொலுசு வகையறுக்களை வைத்திருக்கிறோம்.

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்!

கைத்தறி

(தொழில்-வர்த்தக-மாத வெளியீடு)

ஆசிரியர்: எம். கே. சாமி

- நெசவுத் தொழிலின் துணைவன் 'கைத்தறி'
- ஆணித்தரமான தலையங்கம், விமர்சனம், கட்டுரை கவிதைகளைத் தாங்கி வருவது 'கைத்தறி'
- கட்சி, அரசியல் நோக்கம் சிறிதுமின்றி தொழிலின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டது 'கைத்தறி'
- ஐந்தாண்டுகளாக தொடர்ந்து வெளிவருவது 'கைத்தறி'

ஆண்டு சந்தா ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 3

விவரங்களுக்கு;—

கைத்தறி காரியாலயம், கோவை.

நெசவாளரைக் காப்பாற்றுக!

—

"....நமது ராஜ்யத்திலுள்ள நெசவாளர்கள் உலகத்திலேயே தலைசிறந்த கைத்தொழில் வல்லுநர்களாக விளங்குகிறார்கள். இத்தகையவர்கள் தாம் நெய்கின்ற துணியை வாங்குவோர் இல்லாத காரணத்தால் பட்டினியால் நொந்து வாடுவது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலைமையல்லவா! கைத்தறி நெசவாளர்களைத் துன்பத்தில் துடிக்க விட்டு, மில் துணியை மக்கள் வாங்குவதா?

நம் ராஜ்யத்தில் கைத்தறி மூலம் நெசவாகும் துணி, யந்திரத்தின்மூலம் உற்பத்தியாகும் அதே ரகத்தில் எந்தத் துணிக்கும் நிகராகச் சிறந்து விளங்குகிறது; என்று சிறிதும் தயக்கமின்றி நான் ஒவ்வொருவருக்கும் உறுதி கூறுகிறேன்.

ஒருவர் மில்துணியை வாங்குவதா, அல்லது கைத்தறித் துணியை வாங்குவதா, என்ற பிரச்சனை வரும்போது, என்னைக் கேட்டால், தயக்கமில்லாமல் கைத்தறித் துணியையே வாங்க வேண்டும். இதனால் யோக்யமான, கௌரவமான ஒரு தொழிலைச் செய்யும் கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்றவேண்டும்'' என்று நான் மனப்பூர்வமாக வேண்டிக் கொள்வேன்...."

இராஜாஜி.

—

முன்னுரை

"செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை' —"

மிகமிகப் பழைமை வாய்ந்த தொழிலின் மேன்மையை, உலகினிற்கு உணர்த்தும் பொருட்டு, அறநூலான குறள் ஆசிரியர் வள்ளுவப் பெருமான், நெசவுத் தொழிலையே மேற்கொண்டிருந்தார். அன்னவரின் திருவடிகளுக்கு இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கின்றேன். நெடுங்காலமாகத் துன்பத்தை அனுபவித்து வரும் அவர் வழிவந்த பெருங்குடி மக்கள், விரைவிலே இன்பத்தை அடைய வேண்டு மென்ற வேட்கையினால், பொதுமக்களிடத்திலே, நெசவாளர் நிலையை உணர்த்தி, அச்சமூகத்திற்கு மக்களின் நல் ஆதரவு கிட்டுதற்கு, இந்நூல் உதவிகரமாயிருக்க வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டே வரைந்துள்ளேன். பல்லாண்டுகளாகப்பரதவித்து வந்தவர்களுக்கு ஆறுதல் கூறும் முறையிலே அரசாங்கம் **"கைத்தறி வாரம்"** அனுஷ்டிக்க ஏற்பாடு செய்திருக்கும் சமயத்தில், இந்தச் சிறு நூலை வெளியிட்டு, கைத்தறியாளருக்கு எமது கடமையைச் செய்துள்ளேன் "ஆலைப்போட்டியைச் சமாளிக்க முடியாமல் அல்லலுறும் நெசவாளர்கள், யந்திர சகாப்தத்திற்கு அடிமையாகி, தங்கள் தொழில் அழிவு படாமலிருக்கவேண்டுமே" என்றென்னும்கருத்தினை உணர்த்தும் பொருட்டே, இந்நூலுக்கு **'கைத்தறிக்கு விடுதலை...?'** என்ற தலைப்பு கொடுத்திருக்கிறேன். குற்றங்குறைகளைப் பொருத்து, மக்கள் நல்லாதரவு கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

"வாழ்க கைத்தறி" "வாழ்க காந்தீயம்"

"வாழ்க குடிசைத் தொழில்"

குறிப்பு:- இதில் வெளியிடப்பட்டிருக்கும் குறிப்புகளும், புள்ளி விவரங்களும் தினசரி செய்தித் தாள்களிலிருந்தும் கைத்தறி பத்திரிக்கையிலிருந்தும் திரட்டப்பட்டவை. அதிகாரபூர்வமானவைகள் அல்ல.

கே. பி. இ. சிவராமன்.

கைத்தறியின் பொற்காலம்.

நம் நாடு கைத்தறியின் பிறப்பிடமாகும். பண்டைய காலத்தில் இத்தொழிலை மிகவும் மேம்பட்டதாக மக்கள் கருதிவந்தனர். தமிழ்மறையாகிய திருக்குறளை இயற்றிய வள்ளுவரும் நெசவுத்தொழில் செய்து வந்தார் என்பது ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். நம் நாட்டவர் இத்தொழிலில் சிறந்த ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதற்கு, கையினால் நூல் நூற்று, கைத்தறிகளினால்நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகள் எகிப்து,கிரீஸ் ரோம் முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று அந்நாட்டு மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டும், விரும்பி வாங்கப்பட்டதும் சிறந்த சான்றாகும். நம் நாட்டில் முக்கியமாக டாக்கா—மசூலிப்பட்டணம்—பைதான் முதலிய இடங்களில் இத்தொழில் வித்ருதி யடைந்திருந்தது. இவ்வாறு 19ம் நூற்றாண்டு வரை வெளிநாடுகளுக்கு இங்கிருந்து ஆடைகள் எற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

17ம் நூற்றாண்டிலே நம் நாட்டில் அன்னிய ஆதிக்கம் ஸ்திரமடையத் தொடங்கியது. வியாபார வடிவிலே வந்த ஆங்கிலேயர்கள், தங்களின் தந்திரங்களினால் இங்குள்ள சிறு சிறு மன்னர்களை எல்லாம் தமக்கடக்கமாகச் செய்து, அவர்களின் மூலம் உள்நாட்டு யுத்தங்களை ஆங்காங்கு மூளவைத்து, தங்களிடமுள்ள, படைகள்—ஆயுதங்கள் முதலியவற்றால் யாவரையும் வென்று அடிமைப் படுத்தி, ஓர் பெரிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டனர். வெளிநாட்டிலிருந்துவந்த ஓர் கூட்டம் நம்மிடையே இருந்த சிறு பூசல்களைப் பயன்படுத்திக் கொண்டு, நம்மை அடிமைப்படுத்திக் கொண்டது என்பது ஆச்சரியப்படத்தக்க சம்பவங்களாகும்.

வர்த்தக வடிவிலே வந்தவர்கள் நாடாளத் துவங்கினார்கள் என்றால், அவர்களின் நோக்கம் இந்நாட்டின்

செல்வத்தைச் சுறண்டுவதே என்பது கண்கூடாகும். அம்மாதிரியே வெள்ளையர்கள் தங்கள் நாட்டு உற்பத்திகளை இங்கு நம்மிடையே கொண்டுவந்து ஏராளமாக விற்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துக்கொண்டதுடன், அவர்களுக்குப் போட்டியாக இந்நாட்டில் உற்பத்தியாகி வந்த அனைத்தையும் அழித்துவிடவும் முற்பட்டனர். சுதேசியக் கப்பல்கள் கடலிலே செல்லுவதைத் தடை செய்தார்கள். சுதேசியப் பொருள்களைத் தங்கள் அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதையும் தடுத்தார்கள். குடிசைத் தொழில்களாக நாடு முழுவதும் வியாபித்திருந்த அத்தனைத் தொழில்களும், அந்நிய ஆட்சி ஏற்பட்டபிறகு அழிக்கப்பட்டனவே தவிர ஆக்கம் தரப்படவில்லை.

கையினால் நூற்ற நூலைக்கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் வெளிநாடுகளில் போற்றப்பட்டு வந்தமையைக்கண்டு, அத்தகைய துணிகளைத் தயாரித்துவந்த தொழில் வல்லுநர்களின் விரல்கள் துண்டிக்கப்பட்டன வென்று சரித்திரம் கூறுகிறது என்றால், அந்நிய ஆதிக்கத்தின் காரணமாக நம் நாட்டிலுள்ள குடிசைத் தொழில்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்! அவ்வளவு துன்பங்களைச் சகித்துக் கொண்டும் இன்னமும் உயிருடன் வாழ்கின்றது கைத்தறித்தொழில் எனில், அது இந்த நாட்டுமக்கள் உள்ளத்தே பெரும் மதிப்பைப் பெற்றுவிட்ட காரணம்தான். இயந்திரவளர்ச்சி நம் நாட்டிலே தோன்றுவதற்கு முன் வெளிநாடுகளிலிருந்து வந்த பருத்தி, பருத்திநூல், பட்டு, செயற்கைப்பட்டு, நூல்ஜவுளிகள்—பட்டுத் துணிகள்—இவைகளின் மூலமாக கைத்தறிக்குப் போட்டியிருந்தது. அந்தப் போட்டியை ஓரளவு சமாளிக்க, தங்களுடைய தறிகளிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டனர் நெசவாளர்கள். அதன்காரணமாக கைத்தறியாளருக்கு நெருக்கடி அதிகமாகத் தோன்றவில்லை. ஆனால் உள்நாட்டி

லேயே யந்திரங்களை ஸ்தாபிக்கத் தொடங்கியவுடன், நூல் நூற்றுப் பிழைத்துவந்த அத்தனை பேருக்கும் முதலில் பிழைப்பு போயிற்று. கைத்தறிகளெல்லாம் மில் நூலை வாங்க ஆரம்பித்தவுடன், கையினுல் நூற்பவர்களுக்கு வேலையில்லாது போய்விட்டது. சிலகாலத்திற்குள் மில்களில் துணி உற்பத்தியாகத் தொடங்கவே, கைத்தறிக்கு கஷ்டமேறபடலாயிற்று.

இருபதாம் நூற்றுண்டிலே உள்நாட்டு மில்கள் துணி உற்பத்திசெய்ய ஆரம்பித்தன. இங்கிலாந்திலிருந்தும், ஜப்பானிலிருந்தும் துணி இறக்குமதி பெருகியது. அத்துடன் கைத்தறிகளுக்கு நூல்சப்ளை செய்துவந்த மில்கள், தங்களின் தேவைகளை முதலிலேபூர்த்திசெய்துக் கொள்ள விரும்பியதால், கைத்தறிகளுக்குக் கிடைத்து வந்த நூல், கிடைக்காமல், விலையும் உயரத்தொடங்கியது. அதுவரை கைத்தறிகளின் ஏகபோகமாகவிருந்த மெல்லிய ரக ஆடைகளையும், உள்நாட்டிலே மில்களில் ஏராளமாகத் தயாரிக்கப்படவே, கைத்தறிகள் ஏராளமாக வேலைசெய்வது நின்றுபோய், நெசவாளரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. இத்தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் சொற்ப ஊதியத்திற்காக அதிகநேரம் வேலை செய்ய வேண்டிய நிலைமையும் உண்டாகியது.

முதல் மகாயுத்தத்திற்குப் பின் இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகும்வரை, கைத்தறிக்கு அவ்வளவாக ஊக்கம் ஏற்படவில்லை. அன்றாட வாழ்க்கையை நடத்துவதே கைத்தறியாளருக்கு மிகவும் கஷ்டமாக இருந்துவந்தது. இரண்டாவது யுத்தம் ஏற்பட்டவுடன், சிலோன், பர்மா, மலேயா, சுமத்ரா முதலியநாடுகளுக்கும் மற்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வது அறவே தடைப்பட்டுவிட்டது. ஆயினும் இங்குள்ள ஆலைகளெல்லாம் யுத்தகாலத் தேவைகளை சமாளிக்க தங்கள் உற்பத்தி முழுமையும் ஒதுக்கிவிடவே, கைத்தறிக்கு

சுமார் மூன்ருண்டுகாலம் நல்ல பொற்காலம் என்றே குறிப்பிடலாம். அச்சமயத்திலும், மில் துணிகளின் போட்டியில்லாவிடினும் நூல் நெருக்கடி கடுமையாகிசொல்லவொண்ணாத கஷ்டத்தை நெசவாளர்கள் அனுபவிக்க நேர்ந்தது.

யுத்தம் முடிந்தது. நாட்டில்சகஜநிலைமை தோன்றவே, மீண்டும் பழையபடி ஆலைத்துணிகளுடன் கைத்தறி போட்டி போடவேண்டி ஏற்பட்டுவிட்டது. யுத்தத்திற்குமுன் வெளியிடங்களுக்குச் சென்றுக்கொண்டிருந்த சில ரகங்களைக் கூட, பிரிட்டன், அமெரிக்கா, ஜப்பான்முதலிய நாடுகள் தயாரித்து அங்கே கொண்டு போய் மலைபோல் குவித்து, அந்த மார்க்கெட்டுகளைப் பிடித்துக் கொண்டது. அந்நிய ஆட்சி இங்கு நிலை பெறுமுன்பும், யுத்த காலத்தில் சில ஆண்டுகளும் தான், கைத்தறிகளின் பொற்காலம் எனக்கூறலாம்.

சென்னை இராஜ்ஜியத்தின் கைத்தறி வளர்ச்சி.

1940-ம் ஆண்டில்	3,40,451 தறிகள்
1945-ம் ஆண்டில்	4,95,943 ,,
1947-ம் ஆண்டில்	5,41,879 ,,
1950-51 கணக்குப்படி	8,41,140 ,,

★

சென்னை ராஜ்யத்தில் கைத்தறிகள்	5,59,883
அதை நம்பி வாழ்பவர்கள்	22,40,000 பேர்
ஆந்திராவில் கைத்தறிகள்	2,72,019
நம்பியிருப்போர்	10,88 000

சேலத்தில் நமது ஏஜண்டு :
மணி & கோ., தேர்முட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்.

கதரும் - கைநெசவும்

"கையினுல் நூல் நூற்று அதைக்கொண்டு துணி நெய்வதே "சுத்தக்" கதர் எனப் படுவது. நம் நாட்டிலே விளையும் பருத்தியைக் கொண்டு, நாமே நூல் நூற்பதற்கு, கைராட்டினமும், தக்கிளியும், சிறந்த சாதனங்களாக அமைந்திருக்கின்றன. இந்த யந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படவேண்டியதில்லை. நமது கொல்லர்களும் தச்சர்களும், ராட்டைகளையும் தக்கிளிகளையும், ஏராளமாகத் தயார் செய்து கொடுக்கின்றனர்.

நிலத்தைப் பண்படுத்தி, பருத்தியை விளைவித்து, அதைப் பக்குவப்படுத்திக் கொடுக்கும் குடிமகனும், பஞ்சடிக்கும் யந்திரங்களைச் செய்து தரும் தச்சர் கொல்லர்களும், நூல் நூற்றுத் துணியாக நெய்து, நம் விருப்பத்திற்கு ஏற்றவாறு நெசவில் நுண்ணிய வேலைப்பாடுகள் காட்டி, மேன்மையுடன் நெய்யும் நெசவாளர்களும், அதை விரும்பி அணியும் நாமும், இந்நாட்டில் பிறந்த சகோதரர்களே ஆகும். நாம் இதற்காக ஒருவர்க்கொருவர் கொடுக்கும் பொருள், நம்மிடையிலேயே புழங்கப்பட்டன. இதுவே சுதேசியமாகும். இதனையே காந்தியடிகள் உபதேசித்து வந்தார்.

ஆலைத் தொழிலைப் போல் குடிசைத் தொழிலுக்கு யந்திரங்கள தேவையில்லை. மின்சார விசை வேண்டியதில்லை. முன்பணம் முதல் போட வேண்டியதில்லை. ஓய்வு நேரங்களில் காலத்தை வீணுக்காது, தாங்கள் வசிக்கும் இடத்திலேயே கிடைக்கும் கச்சாப் பொருட்களைக் கொண்டு, தங்கள் தேக பலத்தினுல், செய்யும் தொழிலே குடிசைத் தொழில்களாகும். குடிசைத் தொழிலைக் கற்பதற்குக் கலாசாலைகள் தேவையில்லை பரம்பரையாக குடும்பத்திலேயே அறிமுகப்படுத்தப்படு

கிறது, அத்தகைய தொழில்களில், மண்பாண்டம் செய்தல்—கூடை, பாய் முடைதல்—மரவேலை செய்தல் காகிதம் செய்தல்—செருப்பு முதலிய தோல் சாமான்கள் செய்தல்-செக்கு ஆட்டுதல்-கயிறு திரித்தல் முதலியவை நம் நாட்டிலே முக்கியமாக நெய் தெ ரிலுடன் செழிப்புற்று இருந்தது.

கிராமங்களில் உள்ளவர்கள் வருஷத்திற்கு ஆறு மாதம் வீணுகக் கழிப்பார்கள். விவசாய வேலை இல்லாத போது, நூல் நூற்பதும் நெய்வதும் மேற்கொண்டால், அவர்களின் துணித் தேவையைப் பூர்த்தியாக்குவதோடு, அவர்கள் அதற்காகச் சிலவிடும் பொருளும் மிச்சமாகும். அதைக் கருத்திற்கொண்டே காந்தியடிகள் "வீட்டிற்கொரு ராட்டை சுழல வேண்டும்" என்று பறை சாற்றினர்.

தற்சமயம் நம் நாட்டில் ஆலைத் தொழிலைப் பரப்பி வரும் முதலாளிகள், நாட்டின் தேவையைப் போக்க ஆலைகள் அவசியமே என்று கூறுகின்றனர். ஆலைகள் விரைவிலே ஏராளமான பொருள்களைச் செய்து குவிக்கின்றன என்பது வர்ஸ்தவமே. ஆனல் அவ்வாலைப் பெருக்கத்தினுல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாது. 'அதற்காகவே' நாடு முழுவதும் குடிசைத் தொழில்கள் பெருகவேண்டும், அதுவே வேலையின்மைப் பிரச்சனையைத் தீர்க்க உதவும்" என்று அறிஞர்கள் கூறுகின்றனர். நம் நாட்டிலுள்ள யந்திர உற்பத்தி தொழிற்சாலை முழுவதிலும் சுமார் 5 லட்சம் பேர் வேலை செய்து வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனல் குடிசைத் தொழில்களிலொன்ருகிய கைத்தறித் தொழிலில் மட்டும் சுமார் ஒரு கோடி பேர் ஈடுபட்டிருக்கின்றனர். மற்ற குடிசைத் தொழில்களிலும் இதே போன்று ஏராளமாக மக்கள் பங்கு கொண்டு உழைத்து, அதில் வரக்கூடிய வருமானத்தைக் கொண்டு ஜீவித்து வருகின்றனர். அக்குடிசைத் தொழிற்பண்டங்களை வைத்து

வியாபாரம் செய்பவர்களும், அதனுல் ஜீவிப்பவர்களும் கோடிக்கணக்காக இருக்கின்றனர். அவர்கள் தாங்கள் செய்யும் தொழிலை இழிவாகக் கருதுவது கிடையாது. மேன்மேலும் அத்தொழிலை விருத்தி செய்யவே விரும்புகின்றனர். ஆனுல் அவ்வாறு விருத்திக்கு கொண்டுவர முயலும்போது, குடிசைத் தொழில்களாகவே பெருகி — அத்தொழில் வளம்பெற வேண்டுமென்று கருதுகின்றனரே தவிர, மாற்றங் காண்பதில் அதன் தனமையையும் பெருமையையும் குன்றச்செய்ய நினைக்கவில்லை.

அத்தகைய மாற்றங்கண்ட முறைதான், சென்ற 25 ஆண்டுகளாக கைத்தறிகளின் உபயோகத்திலிருந்து வருகிறது. கைராட்டையை மறக்கவில்லை, மறக்கடித்தவர்கள் பிரிட்டிஷ் ஆதிக்க வர்க்கத்தார். பஞ்சடித்தல் மறந்து விடவில்லை. பஞ்சையே இந்த நாட்டிலிருந்து பூராவும் கொண்டு சென்று, நூலாக இந்த நாட்டில் கொண்டு வந்து குவித்ததும் வெள்ளையரே! ஆகவே வெளிநாட்டு நூல் இங்நாட்டிலே இறக்குமதியாகத் தொடங்கிய காலத்தில், அதை உபயோகப்படுத்தத்தெரியாத நிலைமை ஏற்பட்டு, பல்லாயிரக்கணக்கான கைத்தறிகள் செயலற்றுப் போய்விட்டன. சில நெசவாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கூடே வெளிநாட்டு நூலை உபயோகப்படுத்தும் முறையைக் கண்டுபிடித்து, அதற்கான மாற்றங் கொண்டனர் கைத்தறிகளிலே. நூதனமான மாற்றங்காணுவிடினும், கையினுல் நூற்ற நூல் நெய்து வந்த காலத்திற்கும், அப்போது இயங்கிவந்த தறிகளுக்கும்—மில் நூலை உபயோகத்திற்கு கொண்டு வந்த பின் அமைக்கப்பட்ட தறிகளுக்கும் வித்யாசமுண்டு, கையினுலே நாடாவை எறியும்போது 20 நெ நூல் நெய்யும் தறியில், நாள் ஒன்றுக்கு மூன்று கெஜத்துக்கும் குறைவாகத்தான் நெய்யமுடியும். ஆனுல் இன்று 5 முதல் 10 கஜம் வரை நெய்துவிட முடியும். (பழைய தறிகளில் தான் இன்றும் "ஜமக்காளம், கோர்வை" ரகங்கள் தயாரிக்கப்படுகின்றன.)

இன்றுகூட கைத்தறியின் புதிய அமைப்பிலேயே கதரும்நெய்யப்படுகிறது. நூல் நூற்பதும்-பஞ்சு அடித்துப் பட்டை போடுவதும் எப்போதும் போலத்தான். ஆனால் துணியாக நெய்வது மட்டும் புதிய தறியில். முன்னைவிட இப்பொழுது துணியின் உற்பத்தி இரட்டிப்பு அளவு அதிகரித்திருக்கிறது. ஆனால் அக்காலத்திய கூலியும், கிடைத்த சவுகரியமும், இக்காலத்தில் கிடையாது. சமீப காலம் வரை கதருக்குச் சில கட்டுப்பாடுகள் இருந்தது. கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டவுடன், போலித் தயாரிப்புகள்—அதாவது மில் நூலும் கதர் நூலும் கலந்தவை—ஏராளமாக வெளிவரத் தொடங்கவே, கதரின் மகத்துவம் குறையலாயின.

கைத்தறியின் மாற்றத்தால் கதரின் தன்மையோ, அல்லது பெருமையோ குன்றவில்லை. ஆட்சியாளரின் கதர் கொள்கையில் ஏற்பட்ட மாற்றத்தால், மக்கள் மனதிலே கதருக்கு மதிப்பு குறைந்து வர சந்தர்ப்பமேற்பட்டது.

———

- ★ தினம் ஒன்றுக்கு அதிக பட்சம் 4 முதல் 7 கெஜம் வரை தயார் செய்யலாம்.
- ★ மாதம் ஒன்றுக்கு 24 நாட்கள் வேலை செய்யலாம்.
- ★ வேஷ்டி நெய்யும் 8 லட்சம் தறிகளும் வருஷத்திற்கு 1612 மில்லியன் கஜம் தயாரிக்கலாம்.
- ★ சேலை தயாரிக்கும் 10 லட்சம் தறிகளில் வருஷத்திற்கு 2016 மில்லியன் கஜம் உற்பத்தி செய்யலாம்.
- ★ வருஷம் ஒன்றுக்கு சேலை வேஷ்டிகள் சுமார் 3628 மில்லியன் கெஜங்கள் வரை தயாரித்துக் கொடுக்கலாம்.

'கைத்தறி' துணிகளையே ஆதரியுங்கள்.

நெசவாளர் வாழ்க்கை நிலை.

பண்டைய காலந்தொட்டு நாகரீகவாழ்விற்கு உதவி செய்து வந்த பெருங்குடி மக்களான கைத்தறி நெசவாளர்கள், தங்களின் வாழ்க்கையை நாகரீகப் பாதைக்கு இட்டுச் செல்லவில்லை. உலகிற்கு உன்னதமான ஆடைகளைத் தந்து உதவியவர்கள், தங்களுக்கும் தங்கள் மனையாள், மைந்தர்களுக்கும் நல்லாடை அணிவித்து மகிழ்ந்தாரில்லை. படுக்கை விரிப்புகளிலும், ஜன்னல் திரைச்சீலைகளிலும், கைக்குட்டை மேஜை விரிப்புகளிலும், புடவைகள், வேஷ்டிகள், அங்க வஸ்திரங்கள் முதலியவற்றிலும், வானத்து மீன்களையும், மரங்கொடி, செடி, பறவைகள், முதலியவற்றையுங் காட்டுவதோடு, அழகான ஜரிகை, பட்டு, கலர் நூல்களில் விதவிதமான தோற்றங்களைப் புகுத்தி, பார்ப்போர் மனம் பரவசமடைந்து போகும்படிச் செய்யும் திறன் படைத்துங்கூட தங்கள் வீட்டிலே நல்லபடுக்கை, நல்ல உடைகள் படைத்தாரில்லை.

வள்ளுவனாரின் வாழ்க்கை எந்நிலையிலமைந்திருந்ததென்பதை நாம் அறியோம். சரித்திரச்சான்று கூறுகிறது எளிய வாழ்க்கையே மேற்கொண்டார் என்று. அன்னார் மேற்கொண்ட தொழிலின் சந்ததியாரின் நிலை பாரம்பரியமாக அவ்வாறே அமைந்திருப்பதை நாம் கண்ணாரக் கண்டு வருகிறோம். நெசவாளர்கள் பெரும்பாலும் எளியகுடிசைகளிலும், அல்லது இடிந்துப்போன-தூர்ந்து போன—குட்டிச் சுவர்களுக்கிடையில் அமைந்துள்ளதுமான—வீடுகளிலுமதான் வசிக்கின்றனர். அவ்வீட்டிலே வாயுதேவன் புகுதற்கு எப்பக்கமும் இடமிருது. ஆனால் வருணதேவன் தாராளமாக உட்புகுந்து விளையாடலாம்.

பெரும்பாலும் வாடகைக்கே குடியிருந்து வருகின்ற நெசவாளர்களின் வீடுகளில் சென்று

பார்த்தோமேயானுல், சுகாதார வசதிகளைப்பற்றியோ, அல்லது வாழ்க்கைச் சுகம் பற்றியோ வெளியே செய்யப் படும் பிரசாரங்கள், வெரும் வாய்ப்பிரசாரமாகத் தான் போய்விட்டது. அவற்ருல் யாதொரு பலனும் ஏற்பட வில்லை என்பது தெளிவு. தங்களுக்குக் கிடைக்கும் வருமானம், அந்த மோசமான வீடுகளுக்கு வாடகை கொடுக் கும் அளவுக்குக்கூட சாத்யபடாமற் போகிறது.

கைத்தறியாளருக்கு சாதாரணமான சிறிய வீடு இருந்தால் அவர்கள் தொழில் செய்யமுடியாது. இரண்டு தறிகள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு மூன்று அங்கனம் இருபக்கத் தாழ்வாரம் கொண்ட ஒரு வீடு வேண்டும். அத்துடன் தறிச்சாமான்களும் இருக்கவேண்டும். அப்படி எல்லா சாமான்களுடன் கிடைக்கும் வீட்டிற்கு, அது எவ்வளவு கேவல நிலைமையிலுள்ளதாயிருந்தாலும், இந்தக் காலத்தில்கூட மாதம் ஒன்றுக்கு குறைந்த பட்சமாக 15 ரூபாய் வாடகை கொடுக்க வேண்டும்.

மாதம் ஒன்றுக்கு ஒரு தறியினுல் அதிக பட்சமாக சம்பாத்யம் செய்வது 25 முதல் 30 ரூபாய் வரை தான். இது சாராசரி கணக்கு. இன்னும் மெல்லிய ரக நூல், ஜரிகை கலந்து நெய்பவர்கள் அல்லது பட்டு நெய்பவர்கள் மாதம் 35முதல் 40ரூபாய் வரைதான் சம்பாதிக்க முடியும். அதில் வாடகை- துணிமணி- மருந்துச்சிலவு-பள்ளிக்கூட சம்பளம்- போக மிகுதியைக் கொண்டுதான் உணவு அருந்த வேண்டும்.

ஒரு குடும்பத்திற்கு (5பேர் கொண்ட)ஒருதறிவீதம் கணக்கிடப் பட்டிருக்கிறது. அந்தத்தறி மாதம் பூராவும்– 28நாள்– அன்ருடம் 10மணிநேரம் வேலை செயதால்தான் ஓரளவு கஞ்சி குடிக்கமுடியும். ஆனுல் சொந்தமாகத் தறி நெய்பவர்கள், அதை விற்பனை செய்வதற்காகவும் தறிக்கு வேண்டிய சாமான்கள் சேகரம் செய்து கொள்வதற்கும்

சில மணி நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவே எவ்வளவுதான் கடினமாக உழைத்தாலும், வருஷத்திற்குச் சராசரி 275நாட்கள் தான் வேலைசெய்ய முடிகிறது. இதுகாரணமாக முழுநேர சம்பாத்யக் காரருக்கு கூட தங்களின் வருமானம் குறைந்து, குடும்பத்தைப் பராமரிக்கப் போதியனவாக இருப்பதில்லை. அடிக்கடி வியாபார மந்தமும் ஏற்பட்டுவந்தால் கடன் படுவதைத் தவிர வேறுவழியில்லை. யுத்தகாலத்திற்கு முன்பும்—யுத்த காலத்திலும் இருந்துவந்த அத்யாவசிய பண்டங்களின் விலை, சமாதான காலமாகிய இப்போது—அதாவது யுத்தத்திற்குப்பிறகு—பன்மடங்கு உயர்ந்து விட்டது. ஆனல் கிடைக்கும் வருமானம் குறைந்து, அந்த குறைந்த வருவாய்க்கும் வேலை கிடைக்காது, பஞ்சம் பட்டினி ஏற்பட்டது.

கடனாக கிடைக்கும்வரை, பணமாகவும், உணவுப் பண்டங்களாகவும் வாங்கியபிறகு, தங்களிடமுள்ள எல்லாச் சாமான்களும், தட்டு முட்டு தறிச் சாமான்களுடன், சமையல் பாத்திரங்களைக்கூட விற்றுச் சாப்பிட்டுவிட்டு, உள்ளூரிலேயே யாசகம் கேட்டு முடிந்தபிறகுதான், குடும்பம குடும்பங்களாக ஊரைவிட்டு வெளியேறி, அகதிகள் போன்று கால்நடந்த திக்கில் சென்று, பிச்சைஎடுக்கத் துணிந்தனர் நெசவாளர்கள். எவ்வளவு காலம் பட்டினியால் வாடிக் கொண்டிருப்பார்கள்?

பசி, பசி எனக் கதறும் குழந்தைகளையும், பாலுக்குக் கதறும் குழந்தைகளையும், பிணியால் வாடும் வயோதிகர்களையும், பார்த்துப் பார்த்துச் சகிக்காது பரதேசிகளைப் போல் வெளியேறி, பித்துப் பிடித்துத்திரிபவர்கள் சிலபேர். பட்டினிக்கிரையாக பலியிட்டு, தங்கள் குழந்தைகளைப் பிரிந்த ஏக்கத்தால் வாடுபவர்கள் சிலபேர்—காஷாயம் தரித்து, தங்கள் வாழ்க்கையையே பைராகி வாழ்க்கையாக மாற்றிக் கொண்டவர்கள் சிலபேர். இவ்வளவும் சமீப இரண்டு மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட தொழில் நெருக்கடியின் காரணமாக அடைந்த விபரீதங்களாகும்.

கைத்தறிப் பிரச்சனைகள்.

கைத்தறி நெசவாளர்களில் பெரும்பான்மையோர் சுதந்திர நெசவாளர்களாகும். அதற்கடுத்தபடியாக மாஸ்டர் வீவர்களிடத்திலே அமைந்திருப்பவர்கள். ஒரு பகுதியினர் கூட்டுறவு சங்கங்களிலே சேர்ந்திருப்பவர்கள். சுதந்திரமாக வேலை செய்யும் நெசவாளர்களின் நிலைமையும்,மாஸ்டர் வீவர்களிடம் இருக்கும் நெசவாளர்களின் நிலைமையையும், சிலசமயங்களில் மாறுபட்டிருப்பினும், பலசமயங்களில் ஒன்றியே இருக்கும். மார்க்கெட்டிலே ஜவுளிக்கு கிராக்கி இருக்கும் சமயம், இருவருக்கும் தொழில் நடக்கும், கூலியுங் கிடைக்கும். சுதந்திர நெசவாளருக்கு கூலித்தறிக் காரரைவிட ஓரிரண்டு ரூபாய்கள் அதிகமாக அதுசமயம்கிடைக்கும். ஆனல் கூலித்தறிக்காரர் அதிகநேரம் நெய்து அதைச் சரிக்கட்டிக் கொள்ளலாம். ஆனல் சுதந்திர நெசவாளி தன் சரக்கை விற்பனை செய்யவும், தனக்குவேண்டிய சாமான்களைத் தயார் செய்துக் கொள்வதிலும் சிலமணி நேரங்களைச் செலவிட வேண்டியிருக்கிறது.

ஆனல் மார்க்கெட் மந்தகாலங்களில், அதுவும் தொடர்ந்தார்ப்போல் சிலமாதங்கள் வியாபாரம் நடைபெருவிட்டால், அந்தசமயங்களிலும் இருவரின் நிலைமையும் ஒரே மாதிரியாகத்தான் அமைகிறது. சுதந்திர நெசவாளியும், மாஸ்டர்வீவரும் தங்களிடம் சரக்குத்தேக்கம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, தறிகளை நிறுத்திவிட வேண்டி ஏற்படுகிறது. மாஸ்டர்வீவருக்குச் சிலசமயங்களில் நூல் கடன் கிடைக்கலாம். ஆனல் கூலியாக கொடுக்கப் பணம் வேண்டுமே! அதைச் சமாளிக்க முடியாமல் தறிகளை நிறுத்த வேண்டி ஏற்படுகிறது. அத்துடன் சரக்கு விற்பனை யானலும் பணம் வருவதில்லை. ரொக்கமாக விற்பதற்கு முடிவதில்லை மார்க்கெட் சுறுசுறுப்பாக வருவ

தற்குள், மாஸ்டர்வீவர்களின் நிலைமையும், அவர்களைச் சார்ந்த நெசவாளர்கள் நிலைமையும் மிகவும் மோசமடைந்துவிடுகிறது. அந்தசமயத்தில் நூலின் விலைகளும் குறையும்.

நூல் விலை குறைந்துவிட்டது என்ற காரணம் காட்டி, மொத்தவியாபாரிகள், சரக்கின் விலையைத் தள்ளிக் கேட்பார்கள். பலநாட்கள் கஷ்டப்பட்டுவந்த நெசவாளர்கள், சில சிமயங்களில், தங்களின் பணநெருக்கடி காரணமாக அசலையும் தள்ளி விற்பனை செய்வதுண்டு. இவ்வாறு ஓரிரு ஆண்டுகள் தொடர்ந்தாற்போல், ஏற்பட்டால், சுதந்திரமாக நெசவு செய்துவந்தவர்கள் தங்கள் முதல் இழந்து ஏழைகளாகி, கூலித்தறிக்காரர்களாகி விடுகிறார்கள். மாஸ்டர்வீவர்கள் தனிப்பட்ட நெசவாளர்களாகின்றனர். தனிப்பட்ட நெசவாளியாக மாறும்நிலை, அவர்களைப் பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் அடிமையாக்குவதற்குக் கூடத் தயங்குவதில்லை.

யுத்தத்திற்கு முன்பு ஏற்படாத பல பிரச்சனைகள், யுத்தம் வந்ததினால் ஏற்பட்டது. யுத்தகாலத்தில் ஏற்பட்ட தொந்தரவுகள், இந்த ஏழு ஆண்டுகளாகவும் நிவர்த்திக்க முடியவில்லை. "நூல் பிரச்சனை" "ஜவுளி ஏற்றுமதிப் பிரச்சனை" "ரக ஒதுக்கல் பிரச்சனை" "நூல் வினியோகப் பிரச்சனை" "லாப வரம்புப் பிரச்சனை" "மில்துணிப்போட்டிப் பிரச்சனை" முதலியவை குறிப்பிடத்தக்கவையாகும். சென்னையில் ஸ்ரீபிரகாசம் காரு பிரதமராக இருந்த சமயம் கொண்டு வந்த திட்டத்தை, அது கைத்தறியாளருக்கு நன்மை பயப்பதாக இருந்தும்கூட அதை யாவரும் எதிர்த்த காரணத்தால், அத்திட்டம் பயன் படாமற போய் விட்டது. அதற்குப் பிறகு, நாட்டில் பல்வேறு யோசனைகள் கூறப்பட்டன. பல திட்டங்களைப் பரீட்சார்த்தமாக நடத்தியும் பார்த்தனர். பலனளிக்கத்தக்க முறையில் எந்தத்திட்டமும் இருக்கவில்லை.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் கைத்தறிகளில் ஒரு சில ரகங்களே தயாராகிக் கொண்டிருந்தன. குண்டஞ்சு வேஷ்டிகள்- நூல்&ஜரிகைப்பேட்டில் "வேஷ்டி, துண்டு, உருமால்கள்" ஒரு சில நாட்டுப்புடவைகள் குறிப்பிட்ட திருமண காலங்களில் உபயோகிப்பதற் கென்றே சில ரகங்களும் தயாரிக்கப்பட்டன. நாட்டுப் புறங்களில் கல்யாணகாலங்களில் அந்தரகங்களுக்கு மிக மிக கிராக்கி காணப்படும். அது என்ன விலையாக இருப்பினும் மணமக்களுக்கு, அந்த ஆடைகளைத்தான் வாங்கிக்கொடுப்பது சம்பிரதாயம். ஆனால் இன்று பலநூறு ரகங்கள் வந்து விட்டன. பழைய சம்பிரதாயங்களும் சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வருகின்றன. காலத்திற்கேற்றவாறு மில் ஜவுளிகளைக்கூட மணமக்களுக்கு வாங்கிக் கொடுக்கும் நிலை வந்துவிட்டது.

கைத்தறித் தொழிலிலே உட்புகுந்து பார்த்தால் எண்ணற்ற பிரச்சனைகள் பின்னிக் கொண்டிருப்பதைக் காணலாம். கைத்தறித் துணியில் எவ்வளவு ரகங்களிருக்கின்றதோ, அவ்வளவு "பிரச்சனை" களுமிருக்கின்றன என்பதை எவரும் மறுக்கமுடியாது. இந்தப்பிரச்சனைகளுக்கு ஏகோபித்த முடிவுகாண்பது அரிதாகும். ஒரு இடத்தில் தயாராகும் ரகங்களைப்பற்றியும், அவர்களின் நிலைமையைப்பற்றியும், மற்றொரிடத்தில் தொழில் செய்பவர்களுக்குத் தெரியாது. அதே போன்று கைநெசவில் எத்தனை நூறு ரகங்களிருக்கின்றன என்பதும், அவற்றின் தன்மையும், நிலைமையும் எத்தகையது என்பதும், இதுவரை பலருக்குத் தெரிந்திராத ரகசியங்களாகும். ஏனெனில் குறிப்பிட்ட இந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களுக்கே விபரங்கள் தெரியாமலிருக்கும் போது, இந்த தொழிலின் தன்மையைப்பற்றிய முழுசர்வேயும் இதுவரை சர்க்கார் எடுக்காதிருக்கும் போது, எப்படி அவர்களுக்கு மட்டும் தெரியவரும்? சிக்கலான பல்வேறுவித பிரச்சனைகளைத்தன்னகத்தே ஜீரணித்து, விசேஷகுணம்

சங்களுடன் விளங்கும் நெசவுத் தொழிலைப் பாதுகாப்பது அல்லது அத்தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு நிவாரணமளிப்பது என்றால், அதையாரும் சிறுவிஷயமாகக் கொள்ளமுடியாது.

ரகப் பிரிவினை விஷயத்திலும் ஏகோபித்த முடிவுக்கு நெசவாளர் வரமுடியவில்லை. ஏனெனில் "சேலை வேஷ்டி" ஒதுக்கவேண்டுமென்றால், உடனே கர்ச்சிப் லுங்கி, சராங், பெட்ஷீட், தாவணி, சர்ட்டிங், கோட்டிங், போன்ற ரகங்களைத் தயாரிப்பவர்கள் முனுமுனுக்கிறார்கள். 36 அங்குலத்திற்கும் மேற்பட்ட அகலத்திலுள்ள துணிகளை மில்கள் உற்பத்தி செய்யக்கூடாது என்றாலும், அதற்கும் ஏகோபித்த கருத்தொற்றுமை கிடையாது. ஏனெனில் நெசவுத் தொழிலில் உள்ள ரகங்கள் இவ்வளவு பிரச்சனைகளையும் கிளப்பிவிட ஏதுவாகிறது. மில்களில் நூல்மட்டும்தான் உற்பத்தி செய்யவேண்டும், துணி உற்பத்தி முழுவதும் கைத்தறிக்கே ஒதுக்கிவிடவேண்டும், என்று திட்டவட்டமாக கூறவும் முடியவில்லை. ஏனெனில் நாகரீக உலகம் இதைக்கண்டு ஏளனம் செய்யலாம், இயந்திர சகாப்தத்தில் இதைச் சொன்னால், நெசவாளர் சமூகம் பழிப்புக் கிடமாகும். காலச் சக்கரத்தின் போக்கிலே மனிதன் நாளுக்கு நாள் புதிய புதிய ஆராய்ச்சிகள் மூலம் எத்தனையோ அற்புதங்கள் நடந்துக் கொண்டிருக்கும் இந்நாளில், மில்களை ஒழித்துவிட்டு நம் நாட்டை குடிசைத் தொழில் நாடாக வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நினைப்பதும் தவறுதான்.

இந்தக் குழப்பமான நிலைமை நாடு முழுதுமுள்ள நெசவாளர் களிடத்திலே நிலவி வருகிறது. ஆங்காங்கு தேவைக்கேற்ப வேண்டுகோள் விடப்படுகிறது. ஏகோபித்த கோரிக்கைகள் இல்லாதபடியால் சர்க்கார் எடுத்து வந்த நடவடிக்கைகள் நமக்குப் பயனற்றதாகவே இருக்கின்றது. நமக்கிருக்கும் பிரச்சனைகள் எண்ணற்றவையாக

இருப்பினும், அதைத் தீர்க்கும் வழிகள் பலப்பலவாகத் தோன்றினும், முடிவு மக்களிடத்திலே தானிருக்கிறது. நமது பிரச்சனைகளின் தீர்வு மக்கள் மனதிலே ஏற்படக் கூடிய உறுதியாக இருக்கவேண்டும். அந்த உறுதிக்கு சர்க்காரின் ஆதரவும் இருக்கவேண்டும்.

இதைக் கருத்திற்கொண்டுதான் கனம் 'இராஜாஜி' அவர்கள் முதலாவதாக ரக ஒதுக்கல் பிரச்சனையைக் கிளப்பினர். கைத்தறிக்கு "சேலை வேஷ்டி" உற்பத்தியை ஒதுக்கித் தரவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்தார். அதேசமயத்தில், நம்மில் "12பேர்களில் நெசவாளியும் ஒருவர். அவர்கள்பட்டினிகிடப்பதைநீங்கள் காணச் சகிக்கமாட்டீர்கள் ஆகவே அவர்களின் உற்பத்தியை, அதாவது கைத்தறித்துணிகளை நீங்கள் அவசியம் வாங்கி அணியவேண்டும். மில் துணிகளை எக்காரணத்தைக் கொண்டும் தீண்டக்கூடாது" என்று பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார். நெசவுத்தொழிலிலுள்ள எண்ணற்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் இது முதற்படியாக அமையலாம்.

கைத்தறிக்கு ஒதுக்கப்படும் நூலை, சர்க்காரே ஏற்று கைத்தறி நெசவாளர் சென்டர்களில் வினியோகிக்க வேண்டுமென்றும், அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக, கைத்தறி நெசவாளர்களுக்கு நேரடியாக வினியோகிக்க வேண்டுமென்றும் யோசனைகள் கூறப்படுகின்றன. கைத்தறிகளுக்கென ஒரு நூல் நூற்பு மில் ஏற்படுத்தப் பட்டால், அதில் உற்பத்தி செய்யப்படும் நூல் கைத்தறிகளுக்கு நேரடியாகக் கிடைக்கும், இடையிலே ஏற்படும் செலவுகளும், கமிஷன்களும் இல்லாமல், மில்வாசல் விலைக்கே சகாயமாக தறிகள் பெற்றுக் கொள்ளலாமென்றும் கூறப்படுகிறது. ஆனால் இது விஷயத்திலும் ஒரே மாதிரியான அபிப்பிராயம் எங்கும் நிலவவில்லை. கூட்டுறவுச்சங்கங்களோ, அல்லது சர்க்காரோ, மில்களிலிருந்து

நூல்வாங்கி நேரடியாகக் கைத்தறிக்காரனுக்கு வினியோகம் செய்வதினல் மட்டும், நூலின்விலை குறைந்துவிடும் என்று கூறுவதற்கு இல்லை. மில்லின்விலை குறையாமல், வினியோகத்தினல் மட்டும் அதிகவிலை குறைந்து விடலாம் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அத்துடன், அதை நம்பியிருக்கும் வியாபார சமூகத்தினருக்கு மாற்றுவேலை தரப்படுவதுடன், பல கோடிக்கணக்கான முதலீடும் சர்க்கார் செய்யவேண்டியிருக்கும். மில் சொந்தமாக ஏற்படுத்திவிடுவதினலேயே நூலின விலை குறைந்து விடுமா? அந்த மில்லில் தயாராகும் நூலின் தரம் எப்படியிருக்கிறதோ? உற்பத்திச்சிலவு, புதிய மில்லில் ஏற்படும் நிர்வாகச்சிலவுகள், இவற்றை முன் கூட்டியே நாம் எதிர் பார்க்கும் அளவிற்கு குறைந்து, நமக்கு நூலின்விலை குறைவாகிவிட ஏதுவாகுமா? என்பதும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும்.

"கூட்டுறவுச் சங்கங்களிலே அதிகமாகச் சேர்ந்து கொண்டு, தங்கள் வாழ்வை சீராக்கிக் கொள்ளுங்கள்" என்று கூறப்படுகிறது. "நெசவுத்தொழிலுக்கு இன்றியமையாத சாதனம் கூட்டுறவு முறைதான்" என்றும் கூறப்படுகிறது. அதேசமயத்தில் கூட்டுறவு அல்லாத இதர தனிப்பட்டவர்களும் வாழ்வதற்கு, பலதிட்டங்களைப் போடப்படுகிறது. மாஸ்டர் வீவர்களிடம் இன்று இருந்து வரும் நெசவாளர்களுக்கும், சுதந்திரமாக நெய்துவரும் நெசவாளர்களுக்கும், பயனளிக்கும் திட்டம் ஒன்றை வகுக்க முடியாதா? அப்படி வகுக்கப்பட்டால், அதன் காரணமாக கூட்டுறவு இயக்கம் நசித்துவிடுமா? என்றும் கேட்கப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளை, சில நிபந்தனைகளின் பேரில் மற்றவர்களுக்கும் அளிக்கப்பட்டால், கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுடன், தனிப்பட்டவர்களும் முன்னேற முடியும், என்றே பலர் கருதுகின்றனர். இதுவும் ஆலோசிக்கப் படவேண்டிய விஷயமாகும்.

நூல் பிரச்சனை.

கைத்தறிகளின் நூல் தேவையை கைராட்டைகள் பூர்த்தி செய்த காலம் ஒன்று உண்டு. அன்று நெசவாளி யாரையும் எதிர்பார்க்கவில்லை. தனக்குத் தேவையான நூலைத் தன் குடும்பத்தினரின் உதவியைக் கொண்டே தயாரித்துக்கொண்டான். ஆனால் மில் சகாப்தம் தோன்றவே, அதுவும் நம் நாட்டில் மில்களில் நூல் உற்பத்தி துவக்கமான காலந்தொட்டு, கைத்தறிக்குத் தேவையான நூல் முழுவதும், மில்லை நம்பவேண்டி ஏற்படவே, "நூல் பிரச்சனை" என ஒன்று, நெசவாளிக்கு இருக்கும் பல பிரச்சனைகளுடன் சேர்ந்துக்கொண்டது. இன்று வாங்கிய விலைக்கு நூல்நாளைக்கு கிடைக்குமா? இந்தக் கட்டிலிருக்கும் நூலின் தரம் அடுத்த கட்டில் இருக்குமா? அதைப்பாவுசெய்தால், துணிநெய்வதற்கு நன்றாக வருமா? என்றெல்லாம் கருதவேண்டிஏற்பட்டது. அடிக்கடி நூலின் விலைகள் மாறுவதும், நூலின் தரம் மாறுவதும் சகஜமாக இருந்தது. வெளிநாட்டு நூலுடன் நம்நாட்டு நூல், போட்டி போடவேண்டியிருந்ததால், அன்று தரம் சற்று சுமாராகவே இருந்தது.

இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் கைத்தறிகளுக்குப்போதுமான நூல் கிடைத்துவந்தது. இதற்குக் காரணம் நமது மாகாணம் ஜவுளி, நூல் விஷயத்தில் உபரி மாகாணமாக இருந்ததே, உலகயுத்தம் தோன்றியவுடன் ஏற்பட்ட நெருக்கடிகளில் நூல் நெருக்கடியும் ஒன்று. அந்நிய நாட்டிலிருந்து இறக்குமதி தடைப்பட்டதாலும், உள்நாட்டு உற்பத்திக் குறைவினாலும், கைத்தறிக்குப் போதிய அளவு நூல் கிடைக்கவில்லை. நெசவுத்தொழிலுக்கு நூல் தட்டுப்பாடு, ஏற்பட்டு, கஷ்டங்கள் அதிகரிக்கவே, நூல் கட்டுப்பாடும், வினியோகமும் ஏற்பட்டது. 1947-ம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் நம் மாகாண

கைத்தறிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 15900 பேல்கள் ஒதுக்கப்பட்டன. கைத்தறிகளுக்கு மாதம் பத்து நாள் வேலைக்குக்கூட அவை போதுமானதாயிருக்கவில்லை. கள்ள மார்க்கெட் தாண்டவமாடின. நூல் நெருக்கடி காரணமாக ஜவுளியின் விலை உயரவே, ஜவுளி மார்க்கெட்டில் மந்தமேற்பட்டது. மில் ஜவுளியைவிட கைத்தறி ஜவுளியின் விலை அதிகமாக இருக்கவே, ஏற்றுமதி குறைந்துவிட்டது. இங்கிலேயில் நூல் தேவை குறைய ஆரம்பிக்கவே, 1948-ம் வருட ஆரம்பத்தில் நூல் பங்கீடு முறையையும், கட்டுப்பாடுகளையும் சர்க்கார், கைவிட்டனர்.

ஆனால் மறுபடியும் 1948 ஆகஸ்டில் நூல் கட்டுப்பாடு அமுலாக்கப்பட்டது. 1948 முடிய மாதம் ஒன்றுக்கு 21000 பேல்களும், 1949 ஆரம்ப முதல் மாதம் ஒன்றுக்கு 12,646பேல்களும்கொடுக்கப்பட்டன.ஜில்லாதோறும்கோட்டா நிர்ணயித்து, அந்த அளவின்படி தறிகளுக்கு நூல் கொடுக்கப்பட்டது. இத்திட்டப்படியும் நெசவாளர்களுக்கு தேவையான ரகங்களில் போதிய நூல் தரப்படவில்லை. 1949 அக்டோபரில் நூல் வினியோகத்தில் சில மாறுதல்களும், வியாபாரிகளுக்குச் சில சலுகைகளும்,ஏற்றுமதிக்கு அனுமதியும் வழங்கப்பட்டது. ஏற்றுமதிக்கு அனுமதியளிக்கப்பட்டதால் சில ரக நூல்களுக்கு கிராக்கி ஏற்பட்டது. 1952 ஏப்ரல் ஆரம்பத்தில்கூட கைத்தறிகளுக்கு கிடைத்த நூல் 10000 பேல்தான் எனத் தெரிகிறது.

நூல் வினியோக கால ஆரம்பத்தில் பல குறைபாடுகள் இருந்தது. ஒரு பகுதிக்கு என்ன நெம்பர் நூல் தேவை என்பதைக்கூட புரிந்துகொள்ளாமல், தாறுமாறுக அலாட்மெண்ட் செய்யப்பட்டது. உதாரணமாக 40 நெ, தேவையுள்ள இடங்களுக்கு 10 நெம்பரும், 10 நெம்பர் தேவையான இடத்திற்கு 100 நெம்பரும், 80 நெ. தேவையுள்ள இடத்திற்கு 40 நெம்பரும், 60 நெ. தேவையுள்ள இடத்திற்கு 30 நெம்பரும் அலாட் செய்யப்பட்டது. நெசவாளர்கள் அதை வாங்கி மங்கம்மா மார்க்கெட்டில் விற்று, தங்களுக்குத் தேவையான நூலை அதே மார்க்கெட்டில் வாங்கித்தான்நெய்யநேர்ந்தது. இந்தஅலங்கோலமுறையினுல் பலவாறுஅவஸ்தைப்பட்டனர் நெசவாளர்கள்.

மில் துணிப் போட்டி.

நம் நாட்டில் முதன்முதலாக 1853-ம் ஆண்டில் பம்பாயில் நூல் மில் ஆரம்பிக்கப்பட்டது. 1900 ஆம் ஆண்டில், 50 லட்சம் கதிர்களைக்கொண்ட 195 மில்கள் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. தற்போது நம் நாடுமுழுதும் சுமார் 360 மில்கள் இருக்கின்றன. ஆரம்பத்தில் நூல் நூற்பு மில்லாகவே ஆரம்பிக்கப்பட்டது. கடைசியில் நெசவாலைகளாக மாறியது. முதல் உலக யுத்தகாலத்தில் அன்னியநாட்டுத் துணி இறக்குமதியாகவில்லை. அந்த சமயத்தைமில்கள் பயன்படுத்திக்கொண்டு ஸ்திரமடைந்தன. 1910வரையிலும்மில் துணியைவிட கைத்தறித்துணி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுவந்தது. 1910லிருந்து 1915 வரை இரண்டும் சமமாக இருந்து கடைசியில், மில் வெற்றி கண்டது. 1920ல் கைத்தறித் துணி உற்பத்தி பாதி அளவிற்குக் குறைந்துவிட்டது. ஆனால் அதுசமயம் வெளி நாட்டுத் துணி இறக்குமதி குறைவாக இருந்தபடியால், நெசவாளிகள் ஒருவாறு தங்கள் தொழிலைக் காப்பாற்றிக் கொண்டனர்.

1931ல் மில் துணி உற்பத்திக்கு ஊக்கம் கிடைக்கும் சந்தர்ப்பம் வாய்த்தது. சில நிபந்தனைகளின்பேரில் காங்கிரஸ் மகாசபை "சுதேசி" என்று மில் துணிக்கு சர்டிபைகொடுத்தது. மெல்லிய நூலால் நெய்து வந்த கைத்தறி ரகங்கள் சுதேசியாகக்கருதப்படவில்லை. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இந்திய மில் துணி ரகங்களில், சாதாரண மக்களின் தேவையை அனுசரித்து ரகங்களைத் தயாரித்து, அந்த மார்க்கெட்டையும் கைப்பற்றிக்கொண்டார்கள். மேற்கு ஆப்ரிக்கா, பர்மா, மலேயா, சிலோன், சயாம், போர்னியா, ஜாவா, சுமத்ரா முதலிய இடங்களுக்கு ஏராளமான கைத்தறி ஜவுளியை ஏற்றுமதிசெய்து வந்தோம். அயல்நாட்டுப் போட்டியின்

காரணமாக இந்த ஏற்றுமதிஎல்லாம் குறைந்துபோயிற்று. இரண்டாவது யுத்தம் நடந்து முடிந்தவுடன் கைத்தறிகளுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச கிராக்கியும் போய் விட்டது. யுத்த காலத்தில் நாம் அந்நிய நாடுகளுக்கு அனுப்பிவந்த துணிகளை வெகுவாக குறைத்துக்கொண்டோம். யுத்தம் முடிந்தவுடன் அந்த மார்க்கெட்டுகளை இதர நாட்டினர் வெற்றியுடன் கைப்பற்றிக்கொண்டனர். தவிரவும் அவர்கள் தங்களுக்கு வேண்டிய துணிமணிகளைத் தாங்களே தயாரித்துக்கொள்ள விரும்புகின்றனர். பர்மா, பாகிஸ்தான் முதலிய நாடுகள் நம்மிடமிருந்து இன்று நூல் வேண்டுமென்றுதான் கேட்கின்றனர்.

மில் துணி வெளி நாட்டிலும், உள் நாட்டிலும் கைத்தறித் துணியுடன் போட்டிப்போட்டு வருவதினால் கைத்தறி நெசவாளர்களுக்குப் போதிய கூலி கிடைக்காமல் தொழிலின்றி பிச்சை எடுக்கும் நிலைமைக்கு வந்து விட்டனர். மில் நூலையே நம்பி கைத்தறிகளிருப்பதால், கைத்தறி துணியின் விலை எவ்வகையிலும் குறைப்பதற்கியலாமற் போய்விட்டது.

ஆரம்பத்தில் தங்களுடைய மில்களின் வளர்ச்சிக்காக, அரசாங்கத்தின் உதவியையும், நெசவாளியின் ஆதரவையும் மில் அதிபர்கள் கோரினார்கள், அவர்களுடைய உதவியினால் ஸ்திரம்பெற்ற பிறகு, நெசவாளர்களுடைய சில ரகங்களை மில்கள் உற்பத்தி செய்வதினால், நெசவுத் தொழில் அழிவுபடவும் காரணஸ்தர்களாகிவிட்டனர்.

நூலின் விலை குறைவதற்குப் பஞ்சு விலை குறைய வேண்டுமென்கின்றனர். ஆனால் பஞ்சுவிலை 1947ம் ஆண்டிலிருந்ததைவிட சரிபாதிக்குமேல் குறைவாகப் போயிருந்தும், நூலின் விலை குறையாதது ஏன்?

நூல் தேக்கம், அல்லது ஐவுளித் தேக்கம் ஏற்பட்டுவிட்டதுஎன்றகுரல் முதலிலேஆலைகளிலிருந்துதான்

வெளிவரும். அது அகில இந்திய பத்திரிக்கைகளிலும் முழங்கும். "சர்க்காரின் செவிகளுக்கும் எட்டும். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிக்கு அனுமதி வழங்காவிட்டால் மில்கள் மூடப்படும்" என்ற கோஷம் வானைப் பிளக்கும். அதற்குக்கூட சற்றும் அசைவு கொடுக்காவிட்டால், சில மில்கள் ஷிப்ட் முறை நிறுத்தும். சில மில்களில் ஆட் குறைப்பு நோட்டீஸ் போடப்படும். சில ஆலைகளில் கூலி யைக் குறைக்கப்படும். உடனே மில் தொழிலாளர்களிட மிருந்து பெருங் கூச்சல் கிளம்பும். போராட்ட கோஷங் கள், வேலை நிறுத்தங்கள், பொதுக்கூட்டங்கள் முதலியன நடைபெறும். சர்க்காரின் கவனம் ஆலைகளின் மீது, திரும்பினுல் ஏற்றுமதிக்கு வழி பிறக்கும். உடனே உள் நாட்டில், நூல் அல்லது துணிக்கு கிராக்கி ஏற்படும், வியாபாரிகள் பதுக்கி வைப்பார்கள், அல்லது விலைஉயர்வு கூறுவார்கள். விரைவிலே ஆலைகள் பழையபடி தங்கள் உற்பத்தி நிலைக்கு வந்துவிடும். உதாரணமாக மின்சாரக் கட்டுப்பாடு ஏற்படும் என்பதற்கு முன்னரே, நூலின் விலைகள் உயர்ந்து வந்ததை, சென்ற சில ஆண்டுகளில் நாம் கண்டோம்.

சென்ற வருடம் மில்களில் தயாரான வேஷ்டிகளின் உற்பத்திமீது மத்தியஅரசாங்கம்ஒருகட்டுப்பாடு உத்தரவு விதித்தது.முந்தியவருடஉற்பத்தியிலிருந்து40% குறைவா கத்தான் வேஷ்டி ரகங்களை உற்பத்திசெய்யப்படவேண்டு மென்பது அந்த உத்திரவு. இந்திய சர்க்கார் அதை பரி சீலித்துப் பார்க்கையில், அந்த உத்திரவை மீறி பல மில் களில் வேஷ்டி உற்பத்தி அதிகமாக செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது. அதைக் குறிப்பிட்டு இந்திய பாராளு மன்றத்திலே கனம் தொழில் மந்திரியார் அவர்கள், ஒரு சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினுர். தடையை மீறி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட துணியின் மீது, விற் பனையில் ருபாயுக்கு 0—2—0 முதல் எட்டணு வரை அதிக வரி விதித்து, அந்தத் துகையை கைத்தறித் தொழிலின் வளர்ச்சிக்கு உதவிசெய்ய ஒதுக்கப்பட்டது.

பல அங்கத்தினர்கள் தடையை மீறிய மில்களின் மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவேண்டு மென்று வற்புறுத்தினர். வேண்டுமென்றே மில்கள் தங்கள் உற்பத்தியை அதிகரித்து கைத்தறிக்கு, நெருக் கடியை உண்டாக்கினர், என்றனர். ஆனால் சர்க்காரின் சார்பிலே அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கை நெசவுக்குப் பொருள்வேண்டிமில் துணியின் மீது அதிகசெஸ்வரி விதிக் கப்படுகிறது. ஆகவே மில் துணி மீது வரி விதிப்பது தான் நாம் எடுக்கும் நடவடிக்கையாக இருத்தல் வேண்டும்," என்று பொருள் படும்படி சமாதானம் கூறப் பட்டுவிட்டது. ஆகவே மில் துணிப் போட்டியிலிருந்து கைத்தறியைக் காப்பது அவசியமாகிறது.

தமிழகத்தில் தறிகள்.

தென் ஆற்காடு	31,145	செங்கல்பட்டு	48,079
கோயமுத்தூர்	63.722	தென்கன்னடம்	8,134
மதராஸ்	9,586	மலபார்	52,570
மதுரை	36 103	ராமனாதபுரம்	35 443
தஞ்சை	11.039	திருச்சி	30,282
திருநெல்வேலி	44,553	வட ஆற்காடு	53,159
சேலம்	1,37,413		

சென்னை இராஜ்யத்தில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.

	1941—42	*1951—52*
சுஸைடிகளின் எண்ணிக்கை	— 215 —	1161
தறிகளின் எண்ணிக்கை	9766	2.12.748
பங்குத்துகை	ரூ. 2,21 லட்சம்	118.36 லட்சம்
போனஸ் வழங்கியது		ரூ. 15,75 லட்சம்

கூட்டுறவு மூலம் நெசவாளர் வாழ்வு.

நம் நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றி 60 வருடங்களுக்கு மேலாகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் தோன்றியும் சுமார் 49 வருஷங்களாகிவிட்டன. நம் சென்னை இராஜ்யத்தில்தான் கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் அதிகம். மூன்றில் ஒரு பங்கு நெசவாளர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். 1905-ம் ஆண்டில் காஞ்சீபுரத்தில் முதன்முதலாக கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. 1932-ம் ஆண்டில் சென்னை கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் நானாவித கூட்டுறவு சங்கங்களை அமைப்பதற்கு வழிவகுத்தது.

தற்சமயம் (1953ல்) நம் ராஜ்யத்தில் 1161 கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிருக்கின்றன. அத்துடன் பல விற்பனை டிப்போக்களும், ஏஜெண்டுகளும் நியமிக்கபபட்டிருக்கிறார்கள். வளர்ந்துவரும் கூட்டுறவுச் சங்கங்களிலே கைத்தறியாளர்கள் பெருவாரியாகக் சேருவதற்குத் தயங்குகிறார்கள், இதற்குக் காரணமும் இருக்கிறது.

சென்ற ஆண்டுகளிலே கலெக்ட் வீவிங் சென்டர் வைத்து நெசவாளர்களுக்கு, பஞ்ச நிவாரணமாக வேலையளித்தார்கள். அதிலே கொடுக்கப்பட்ட கூலி, கால்வயிற்றுக் கஞ்சிக்குகூட போதியனவாக இல்லை. முடிச்சுக்கு மூன்றணா முதல் ஐந்தணா வரை கூலியாகத் தரப்பட்டது. 30நெ 40 நெம்பர் நூல் 10 ராத்தல் ஒரு தறிக்குத்தரப்பட்டது. சில இடங்களில் 20 ராத்தலும் கொடுக்கப்பட்டது. பாவு போடுதல், பாவு தோய்தல், பசை போடுதல், எண்ணை, இணைப்புக் கூலி, நூல் இழைத்து தார் சுத்துதல், அச்சு, பண்ணை முதலிய தேய்மான சிலவுகள், நீங்களாக மாதம்

ஒன்றுக்கு பாவு இரண்டுக்கும் சேர்த்துகூலியாக நின்றது ரூ. 8—8—0 தான்.

60 நெ. 80 நெ. 100 நெ. நூல் நெய்துவந்த தறிகளுக்குக்கூட மாதம் ஒன்றுக்கு 10 ராத்தல் நூல்தான் தரப்பட்டது. குறைந்தபட்சமாக 40 கெஜம் பாவு ஒன்றுக்கு. அதாவது கெஜம் ஒன்றுக்கு 0—7—0 வீதம் தரப்பட்டது. 40 கெஜம் நெய்வதற்குத்தான் மாதம் பூராவும் நூல் தரப்பட்டது – பாவு செய்தல் போன்ற செலவுகள் போக, மீந்தது மாதம் சுமார் 12—0—0 ரூபாய்தான்.

1952-53ல் சற்று கூடுதலாக, இரண்டு பாவு (80 கிஜம்) வரை தரப்பட்டது. நூல் கண்ட்ரோல் நீங்கிய பிறகு கூலி சற்று குறைவானாலும், நெய்யும்வரையில் - (அதாவது வியாபாரமிருந்தால்) நூல் தரப்படுகிறது. லாபம் வந்தால் போனஸ் வழங்கப்படுகிறது. சில சுஸைடிகளில் நஷ்டங்களும் சில சமயங்களில் ஏற்பட்டுவிடுகின்றன. மொத்தத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் இறந்தகாலம், கைத்தறியாளர்களின் ஆதரவைப் பெறவில்லை, நிகழ்காலமும், எதிர்காலமும் சர்க்காரின் ஆதரவு கிடைக்கும்பட்சத்தில், கைத்தறியாளர்களின் நல்லாதரவைப் பெறுவதுடன், நெசவாளர்களின் க்ஷேமத்திற்கும் வழிகாட்டியாக அமையும்.

சமீபத்தில் மத்திய அரசாங்கம் மில் ஜவுளியின் மீது செஸ்வரி விதித்து, அத்தொகையைக்கொண்டு, கைத்தறிகளுக்கு நிவாரணமளிக்க முன் வந்திருக்கின்றனர். எஞ்சிய சென்னை ராஜ்யத்திற்கு, சுமார் 90 லட்சம் ரூபாய் அதன்மூலம் கிடைக்கும். அதைக் கைத்தறிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த சர்க்காரும், கூட்டுறவு இயக்கமும் பாடுபட்டு வருகிறது. சென்ற ஒன்னறை மாதமாக (1954 பிப்ரவரி 28 தேதிவரை கூட்டுறவு சங்கங்களிலே) 5 ரூபாயுக்குமேல் 50 ரூபாய் வரை துணி வாங்கு

பவருக்கு 1 ரூபாயுக்கு 0—1—6 ரிபேட் வழங்கப்பட்டது. அதேமாதிரி கதருக்கும் வழங்கப்பட்டது. இனி கைத் தறித்துணி விற்பனை நிலையங்கள் யாவும், கூட்டுறவு என்ற பாகுபாடின்றி 10 ரூபாயிக்குமேல் 0—1—6 ரிபேட் வழங்க வேண்டுமென்று மாகாண அரசாங்கம் முடிவு செய்து மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்கிறது. இந்த துகை யாவும் செஸ் மூலம் கிடைத்தது தான்.

இன்று புதிய கூட்டுறவு நெசவாளர் சங்கங்களை ஆங்காங்குதோற்றுவிக்க முயற்சிஎடுக்கப்பட்டு வருகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் சேரவிரும்பும் ஒருநபருக்கு பங்குத் தொகைக்காக அவர்செலுத்தவேண்டியது ரூ. 6-4-0தான். பாக்கி 18–12–0யும் சர்க்காரே அளித்து, மாதம் கொஞ்ச மாகப் பிடித்தம் செய்துக் கொள்ளுகிறார்கள். தவிர அவருக்கு 65ரூபாய் மூலப் பொருள்களுக்காகவும் கொடுக்கப் படுகிறது. குறைந்தபக்ஷம் 50பேர் சேர்ந்தால் ஒரு புதிய சங்கம அமைக்கப் படுமென்று கூறப்படுகிறது.

இந்தப்புதிய சுஸைடியின் சரக்கு உற்பத்தி ஒருக் கால், உடனடியாக விற்பனையாகாது தேங்கிவிட்டால், அவற்றை மாகாண சங்கம் ஏற்றுக்கொண்டு பணஉதவி செய்யுமா? என்பது தெரியவில்லை, சரக்குத் தேக்கத்தின் மீது கடன் வழங்கப்படுமா? அல்லது சரக்கையே ஏற்றுக் கொண்டு, நூலும் பணமும் தரப்படுமா? என்ற கேள்வி நெசவாளர்களிடையே தோன்றியிருக்கிறது.

நாட்டிலுள்ள மொத்த தறிகளில்

சில்க் — ஆர்ட் சில்க் & டோரியா	7	லட்சம் தறிகள்
வேஷ்டி ரகங்கள்	8	லட்சம் தறிகள்
சேலை ரகங்கள்	10	லட்சம் தறிகள்

· மற்றவை பல ரகங்கள் நெய்பவை.

மொத்த தறிகளின் எண்ணிக்கை 28,51,684.

நெசவுத் தொழிலில் சர்க்கார் கவனம்.

கைத்தறி நெசவுத் தொழில் நம் நாட்டில் க்ஷீணிப்பதற்குக் காரணம் அன்னிய அரசாங்கமும், அவர்களின் வியாபார நோக்கமுமாகும், என்பதை முன்னரே படித்தோம். ஆண்டு ஒன்றுக்கு அறுபது கோடி வரை, வெளிநாடுகளுக்குத் துணிக்காக அனுப்பிக்கொண்டிருந்தோமென்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. பஞ்சும், பட்டும், கம்பளமும், நார்வகையும் நம் நாட்டில் விளையும் போது—அதைக்கொண்டு நம் தொழிலாளர்கள் உலகம் புகழத்தக்க வேலைபாடுகளுடன் துணி உற்பத்தி செய்யக் காத்திருக்கும் போது—அதை ஆவலோடு வாங்கி அணிய, ஆடவரும் பெண்டிரும் நம் நாட்டிலும், ஏன் வெளி நாடுகளிலும் தயாராக இருக்கும்போது, நாம் வெளி நாடுகளிலிருந்து ஆண்டுக்கு அறுபது கோடி ரூபாயுக்கு துணி இறக்குமதி செய்து வந்தோம் என்றால், நம்முடைய தொழில் வளத்தை அன்னிய ஆதிக்கம் எவ்வளவு கீழ் நிலைக்கு கொண்டு வந்து விட்டது? என்பதை மகாத்மா காந்தியடிகள் உணர்ந்தார். காங்கிரஸ் மகாசபையின் மூலம் இதை நாடெங்கும் பறை சாற்றினார். கைராட்டைகள் மீண்டும் சுழலச்செய்து, நமக்கு வேண்டிய துணிகளை நாமே தயாரித்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினார். அதற்காக ஓர் பெரும் போராட்டத்தையே துவக்கினார். 1920-ல் அன்னியத்துணி பகிஷ்கார இயக்கம் நாடெங்கும் நடை பெற்றது. மில் துணிகள் தீயில்வெந்து சாம்பலானதைக் கண்டோம். காங்கிரசின் சின்னமான மூவர்ணக் கொடியின் மத்தியிலே, கைராட்டையைப் பொருத்தி, தேசியச் சின்னமாக்கினார். காங்கிரஸ் வாதிகள் கைராட்டையில் நூற்ற நூலால் நெய்த கதராடைகளையே அணிய வேண்டுமென்று கட்டாயமாகத்திட்டம் செய்தார். அதன் மூலமாக நாட்டிலே சுதேசியப் பற்று மீண்டும் ஏற்படத்தொடங்கியது. ஆயினும் அந்நிய ஆட்சியின்

காலத்தில், உள்நாட்டிலே ஏராளமான நெசவு ஆலைகள் ஏற்படலாயிற்று. கைத்தறிகளுடன், மில்துணி போட்டி போடும் அளவிற்கு உற்பத்தியும் பெருகிவிட்டது. வெளி நாட்டு மார்க்கட்டை இழந்த கைத்தறிகளுக்கு உள் நாட்டிலும் கிராக்கி இல்லாமற்போகவே, கஷ்டங்கள் ஏற்படலாயின.

அத்துடன் நூலுக்கும் ஆலைகளையே எதிர் பார்க்க வேண்டியநிர்ப்பந்தமேற்பட்டது. ஆலை நூலின்விலை கூடுதலாகவும், மில்துணியின் விலை குறைவாகவும் இருக்கலாயின. கைத்தறிகள் இந்தப் போட்டியைச் சமாளிக்க முடியாமல் திண்டாடத் தொடங்கின. வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. சரக்குத் தேக்கம் காரணமாக பொருளாதார நெருக்கடியும், விலை வீழ்ச்சியின் காரணமாக நஷ்டமும் ஏற்பட்டன. பஞ்சம்-பட்டினி - தோன்றி நெசவாளரைக் கொடுமைக்குள்ளாக்கியது.

கஷ்டங்கள் நேரும் போதெல்லாம் சர்க்காரிடம் முறையிட்டுக் கொள்ளத் தயங்கியதில்லை கைத்தறியாளர்கள். கூட்டங்கள் போட்டும், ஊர்வலங்கள் நடத்தியும், மகாநாடுகள் கூட்டியும், தீர்மானங்கள் செய்தும், எல்லா இடங்களுக்கும் அனுப்புவார்கள். ஆனால், அவர்களின் கோரிக்கைக்குச் சரியான பரிகாரம் ஏற்படாது. நூல்விலை குறையவேண்டும் என்றால், நூலின்விலை மார்க்கெட்டில் ஏறிக்கொண்டே போகும். 80 நெ. 100 நெ. நூல் தேவை என்று கேட்டால், 40 நெ. 30 நெ. நூல் அலாட்மெண்ட் செய்யப்படும். இதை நாங்கள் நெய்ய முடியாதே என்றால், அதை நெய்யப் பழகிக் கொள்ளுங்கள் என்று பதில்வரும் எங்களிடம் அதற்கு வேண்டியஅச்சு கிடையாதே என்பர். தயாரித்துக் கொள்ளுங்கள்! என்பதே பதில். நூல் அதிகமாக ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை எழும்போது, மாதம் 5 ராத்தல் நூல் கிடைக்கும். அதன்பிறகு $2\frac{1}{2}$ ராத்

தலும் கிடைக்கும். இவ்வாறு நூல்கண்ட்ரோல் காலத்தில் நூல் கட்டுப்பாடு வினியோக முறை இருந்தது.

யுத்தகாலத்தில் சிறிது அதிக வருமானம் கிடைத்தது. அதைத் தாறுமாருக செலவு செய்து விட்டனர் என்று, நெசவாளர்களைப்பற்றி, குறை கூறப்படுவதுண்டு. ஆனல்சிலர் அவ்வாறு நடந்துகொண்டிருப்பினும், பெரும்பாலோர், யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட பஞ்சம், வேலையின்மை, இதன் காரணமாக தங்களிடமிருந்த பொருளைத்தையும் இழந்துவிட்டு, இன்று பிச்சை எடுக்கும் நிலைக்கு வந்து விட்டனர்.

போராட்டங்களெல்லாம் எவ்வித பலனையும் கொடுக்கவில்லை. ஏதோ அப்போதைக்கு சில நிவாரணம் கிடைத்ததோடு சரியாகிவிட்டது. தொழில் துறையிலே முன்னேற்றங்காண்பதற்கோ, அல்லது அரசாங்கத்தின் கவனத்தை நெசவாளர்பால் திருப்புவதற்கோ, அந்தப் போராட்டங்கள் உதவிகரமாயிருக்கவில்லை. சர்க்காரும் நெசவாளர்களின் குரலை அலட்சியப்படுத்தியே வந்திருக்கின்றனர். அவ்வப்போது தங்கள் கவனத்தைச் சிறிது செலுத்தி, இந்த பிரச்சனையைத் தீர்க்க முயன்றிருந்தால், சென்ற மூன்ருண்டுகளாகவே தொடர்ந்து ஏற்பட்டு வந்த கைத்தறியாளரின் கஷ்டங்கள், அகதிகள் போல் வெளியேற்றம்-பட்டினிப் பட்டாளங்கள் - முதலியவைகள் ஏற்படாது ஓரளவு தடுக்கப் பட்டிருக்கலாம்.

கனம் 'இராஜாஜி' அவர்கள் சென்னைராஜ்ய பிரதமரானவுடன், கைத்தறியாளரின் மீது கருணை கொண்டு, ஆங்காங்கு பிரசாரம் செய்து வருவதுடன், சென்னை அசெம்பளியின் பரிபூரண ஆதரவுடன் கைத்தறிகளுக்கு "சேலை வேஷ்டி" ரகங்களைப் பூரணமாக ஒதுக்கித்தர வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு தீர்மான ரூபமாக ஓர் வேண்டுகோளையும் விடுத்தார். அதன்பிறகுதான்

யூனியன் அரசாங்கம் நெசவுத் தொழிலின்மீது சிரத்தை கொண்டு, சென்ற (1953) ஆண்டில் ஓர் விசாரணைக் கமிட்டியை நியமித்தனர்.

மில்களில் உற்பத்தியாகும் துணிகளின் மீதும் ஓரளவு கட்டுப் பாட்டை விதித்தனர். கலர் சேலைகளை மில்கள் தயாரிக்கக் கூடாதென்பதுடன், வேஷ்டிரகங்களிலும் 40%சதவிகிதம் உற்பத்தியைக்குறைக்க உத்திரவிட்டனர். மில்துணியின் மீது செஸ்வரி விதித்து, அந்தத் துகையைக் கைத்தறிகளின் அபிவிருத்திக்காக சிலவிடப் போவதாகவும் அறிவித்தனர். வெளி நாடுகளில் கைத்தறிகளுக்கு மார்க்கெட் தேடுவதற்காகவும், பிரசாரம் செய்வதற்காகவும், விற்பனை நிலையங்கள் அமைப்பதற்காகவும் அந்தத் துகையிலிருந்து சிலவிடப் போகின்றனர்.

நாளது 1954 மார்ச்சு 7ந்தேதியிலிருந்து 13ந்தேதி வரை "கைத்தறி வாரம்" அனுஷ்டிக்கப்பட்டு, கைத்தறிகளைப்பற்றி மக்களிடத்திலே தீவிரமாகப் பிரசாரம்செய்து, கைத்தறித் துணிகளையே வாங்கி அணியவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவும்; ஏற்பாடு செய்யப்பட்டிருகிறது. கூட்டுறவுச்சங்கங்களை ஆங்காங்கு தோற்றுவித்து கைத்தறியாளரை அதில் ஈடுபடுத்துவதற்காக பல லட்சம் ரூபாய்களை ஒதுக்கியிருக்கின்றனர். உள்நாட்டிலே துணியை விற்பதற்கு எம்போரியங்களை அமைத்தலும், பிரசாரவான்கள் மூலமாக கிராமங்கள்தோறும்சரக்கைக்கொண்டு போய் விற்பனை செய்யவும், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் சிலவு செய்ய திட்ட மிட்டிருக்கிறார்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, தனிப்பட்ட நெசவாளர்களுக்கும், மாஸ்டர்வீவர்களிடம் நெய்யும் தறிகளுக்கும் நிவாரணமளிக்கும் திட்டத்தைப் பற்றியும் ஆலோசனை நடத்திவருகிறார்கள். கைத்தறி ஜவுளிக்கு ரிபேட் அளிப்

பதில் கூட்டுறவுச் சங்கங்களல்லாத இதர விற்பனைகளுக்கும் ரிபேட் அளிக்க கோரபட்டிருக்கிறது.

தற்போது சென்னை சர்க்கார் தன்பட்ஜெட்டிலே மில்துணியின்மீது ரூபாயிக்கு 0—1—6 வரிவிதிக்கப் போவதாக அறிவித்திருககிறார்கள். அந்த அறிவிப்பின் காரணமாக, மில்துணி விலை கூடுதலாகும். கைத்தறியின் மீது பொதுமக்களின் கவனம் திருமபவும் ஏதுவாகலாம்.

கைத்தறிக்குப் பாதுகாப்பளிக்கும் பொருட்டு, சிற்சில ரகங்களை மில்கள் தயாரிக்கக் கூடாதென்று தடை விதிக்கும்படி, மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் கோரியிருக்கிறது. அதற்கடுத்த படியாக குறைந்த பட்சமாக கைத்தறிகள் வேலை செய்யும் பிரதேசங்களில் மில் வேஷ்டி இறக்குமதியாவதைத் தடைசெய்ய வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்கள்.

இன்னும் பல திட்டங்களின் மீது சர்க்காரின் கவனம் சென்ற சில மாதங்களாகவே சென்றிருக்கிறதென்பதை இதன் மூலம் நாம் அறிவித்துக்கொள்கிறோம்.

"கைத்தறி வாரமும், நெசவாளர் தினமும்"

* 15—4—50-ல் நெசவாளி பத்திரிக்கையில் இந்த யோசனை வெளியிடப்பட்டது.
* 1950 ஆகஸ்டு 15-ல் சேலத்தில் நெசவாளர் தினம் கொண்டாடப்பட்டது.
* 1952 ஏப்ரலில் சேலத்தில் கூடிய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸின் மாகாண மகாநாடு கனம் V. V. கிரி, (இன்றைய யூனியன் தொழிலாளர் மந்திரி.) அவர்கள் தலைமையில், நெசவாளர் தினம் ஆண்டுதோறும்கொண்டாடுவதாகத்தீர்மானித்தது.
* 1954 மார்ச்சு மீ 7-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை அகில இந்திய கைத்தறி வாரம் கொண்டாடப் படுகிறது.

கைத்தறிக்கு விடுதலே.

இச்சிறு புத்தகத்தின் தலைப்பு "கைத்தறிக்கு விடுதலே...?" என கொடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நம் நாட்டிலே வளர்ந்து வரும் குடிசைத்தொழில் மேன்மேலும் வளர்ச்சியடையவேண்டுமென்றநோக்கத்துடனேயேவரையப்பட்டிருக்கிறது. அன்னியனுக்கு நாம் அடிமைப்பட்டிருந்தோம். அத்துடன் நமது பரம்பரைச் சொத்தான குடிசைத் தொழில்களையும் அழிந்து போகும் நிலைக்குக் கொண்டு வந்தோம். ஆண்டுகள் பல அவ்வாறே கழித்தோம். அந்நியப் பிடியினின்றும், ஏகாதிபத்யச் சுரண்டலினின்றும், விடுபட்டு சுதந்திர மடைந்தோம். காந்தி மகானின் கருணையினால், ரத்தக்களறியின்றி அஹிம்சையின்சின்னத்தோடு, ஆட்சியைக் கைப்பற்றினோம். அடைந்த சுதந்திரத்தை வளர்த்து, பேணிக்காப்பதில் அசிரத்தை கொள்ளாமல் கண்ணும் கருத்துமாக இருப்போமாக!

ஆட்சிச்சுதந்திரம் பெற்றோம். அடிமையிலிருந்து விடுதலையடைந்தோம். இனி பொருளாதாரச் சுதந்திரத்தைப் பெற போராடவேண்டி நாம் முனைந்திருக்கிறோம். அன்னியன் நமக்கிழைத்த கொடுமைகளைப் பொருத்தோம். அவனால் அழிக்கப்பட்ட குடிசைத் தொழில்களையும் போற்றிவளர்ப்போம். அதற்கு முதற்படியாக "கைத்தறிக்கு விடுதலை" காண்போம்.

யந்திரங்களின் போட்டி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. குடிசைத் தொழில்களின் வளம் நாளுக்கு நாள் குன்றிவருகிறது. யந்திரங்களுடன் குடிசைத் தொழில்களை மோதவிடுதல், நாம் பெற்ற சுதந்திரத்தின் லட்சியத்தையே மாற்றிவிடும் செயலாகும். குடிசைத் தொழில்களை யந்திரங்கள் எக்காரணத்தைக் கொண்டும் கைப்பற்றுவதற்கு சர்க்கார் இடம் தரலா

காது. குடிசைப் பொருட்களை அதிகமாக தயாரிப்பதற்கு சர்க்கார் மாணிபம் வழங்கி அதை வளர்க்கவேண்டும். அதுவே நமது காந்தியடிகளின் கருத்துமாகும்.

கைத்தறிக்கென "சேலை வேஷ்டி" ஒதுக்குவதில் அரசாங்கம் யோசனை செய்துக் கொண்டிருக்கக்கூடாது. அதுவேகைத்தறித்தொழிலுக்கு விடுதலை அளிப்பதாகும். அவ்விடுதலை கிட்டுமென்றேநம்புகின்றனர் நெசவாளர்கள். அன்றே கைத்தறியாளரின் விடுதலைநாளாகும்."

கைத்தறித் துணிகளை ஏராளமாக வாங்கி பொது மக்கள் ஆதரிப்பது ஒன்றே, ஏழை மக்களைக் காப்பாற்றுவதாகும். பஞ்சம்– பட்டினி–மில் துணிப் போட்டி–இவைகளினின்று மீளமுடியாது தவித்துக் கொண்டிருக்கும் கைத்தறியாளருக்கு, மக்கள் அளிக்கும் ஆறுதல், அவர்களால் தயாரிக்கப்படும் துணிகளையே வாங்கி அணிவதுதான். சிறிது விலை கூடுதலாக இருப்பினும், நம் சகோதரர்களுக்கு நாம் கொடுக்கும் உதவி தான் அது. வேறு எந்த ஆலை முதலாளிக்கோ, வெளி நாட்டவர்க்கோ கொடுக்கப் படுவதில்லை; என்பதை உணரவேண்டும்.

நம் சகோதரர்கள்! நமது கைத்தறியாளர்! நம் நாட்டு சுதேசியத்துணி! என்ற கருத்தை நாம் மனதிற் கொண்டோமேயானால், பன்னிருவரில் ஒருவரான நெசவாளியின் வாழ்வும், அவன் குடும்பமும் க்ஷேமமுறும். அதுவே நாம் செய்யவேண்டிய கடமையுமாகும். அன்றே "கைத்தறிக்கு விடுதலை" கிட்டிய தினமுமாகும்.

கைத்தறிகளின் இன்றைய அமைப்பை மாற்றி, பெடல் தறிகளைப் புகுத்த நடக்கும் முயற்சி விரும்பத் தக்கதல்ல. இன்றைய துணி உற்பத்தியையே விற்பனை செய்ய இவ்வளவு முயற்சி எடுக்கப்பட வேண்டியிருக்க, இனி அதிக உற்பத்திக்கு வழிகாண்கில், எவ்வாறு விற்

பணி செய்வது? அது கைத்தறியாக இருக்காமல், யந்திரங்களின் பகுதியாக வன்றோ இருக்கும்!

கைத்தறிகள் அழிவுபடாமல் காக்கப்பட வேண்டுமேயானால், அதை மாற்றி, யந்திர நிலைக்கு ஒப்ப அமைக்கக்கூடாது. இருக்கும் நிலையிலேயே வேலை செய்ய ஊக்கம் தந்து, அதில் தயாராகும் சரக்குகளுக்கே மதிப்பளித்து, மக்கள் தங்கள் தேவை அணைத்திற்கும் விரும்பி வாங்கி அணிய வேண்டுமென்று கோருகிறேன். அதுவே கைத்தறிக்கு நாம் செய்யும் சிறந்த பணியுமாகும். இப்பணியை பொதுமக்களும், சமூக ஊழியர்களும் திறம்பட புரிந்து, கைத்தறிக்கு யந்திரப்போட்டியினின்று விடுதலை கிட்டச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கைத்தறியாளரின் மீது கருணைகொண்டு, தொழிலாளரையும், தொழிலையும் ஆதரித்து வரும் யாவருக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கடந்தபல ஆண்டுகள், கைத்தறிக்குச் சிரமம் நிறைந்தவையாக இருப்பினும், எதிர்காலம் மிக நலமாக அமைந்து, தலைவர்களும் அரசாங்கமும் நல்ஆதரவு தந்து, "கைத்தறிக்கு விடுதலை" கிட்ட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

வாழ்க கைத்தறி! வாழ்க நெசவுத்தொழில்!! வளர்க காந்தியம்!!

இப்புத்தகம் வேண்டுவோர் ★

★ கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

கே. பி. இ. சிவராமன்,

செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

தந்தி : 'பத்மா' போன் நெ. 219 ஸ்தாபிதம்: 1916

தபால் பெட்டி நெ. 21

கல்யாண காலத்தை முன்னிட்டு மிகவும் குறைந்த

ஒரே விலை விற்பனை

கண்ணைக் கவரும் பார்டர்களில் எல்லாவிதமான

பட்டு & நூல்

ஜவுளிகள் மிகவும் சிறந்த நாகரீகமான வகையில்

ஸ்டாக் செய்துள்ளோம்.

கோபால பத்ம விலாஸ்

இப்பொழுதே எங்கள் கடைக்கு நேரில்

விஜயம் செய்து வாங்கி திருப்தி

அடையுங்கள்.

★ ★ ★

புரொப்ரைட்டர்ஸ்:

S. N. பத்மநாப செட்டியார், P. R. ஜெயகோபால் செட்டியார்,

S. P. ராமநாதன்

385, பஜார் வீதி, சேலம்.

போன் : 33 கூட்டுறவு இயக்கம் வளர்க! ஸ்தாபிதம் : 1938.



அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொசைடி லிமிடெட், S. 532.

அம்மாபேட்டை, சேலம்.

எங்களிடம் 20, நெ. முதல் 100 நெ. வரை உள்ள நூல்களில் தயாரான துண்டுகள், வேஷ்டிகள், சேலைரகங்கள், ஜரிகை பேட்டு அங்க வஸ்திரங்கள், ஜரிகை பேட்டு சேலைகள், குண்டஞ்சு. பாவஞ்சு & மில் பார்டர் வேஷ்டிகள். கோரு சேலைகள். கர்ச்சிப் ரகங்கள், ஷர்ட்டிங் பீஸ்கள முதலியன எல்லா ரகங்களிலும், எல்லா கெஜங்களிலும் கிடைக்கும். நீடித்த உழைப்பிற்கும், சாயத்திற்கும் உத்திரவாதமான கைத்தறி ஆடைகளுக்கு எங்கள் சொஸைடி ஜவுளிகளையே கேட்டு வாங்குங்கள்.

உங்கள் திருப்தியே எங்கள் நோக்கம்.

A. மாரியப்பன்,
தலைவர்.

அச்சிட்டோர் : ராமலிங்கம் பவர் பிரஸ், அருணசல ஆசாரி தெரு, சேலம்.